முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (21.3.2025) தலைமைச் செயலகத்தில், சமக்ர சிக்ஷா திட்டத்தின் கீழ் 2018ஆம் ஆண்டு முதல் ஒன்றிய அரசால் தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறைக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வந்த நிலையில், தேசியக் கல்விக் கொள்கை. பி.எம்.ஸ்ரீ பள்ளிகள், மும்மொழிக்கொள்கை ஆகியவற்றை செயல்படுத்தாத காரணத்தால் கடந்த ஆண்டு சமக்ர சிக்ஷா திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையில் ஒன்றிய அரசின் 60 சதவீதப் பங்கான 2,152 கோடி ரூபாய் வழங்கப்படாததால், பள்ளி மாணவர்களின் எதிர்கால நலன் கருதி, முதலமைச்சர் அவர்களால் அந்நிதி ஒதுக்கீடு செய்து, தொடர்ந்து திட்டங்கள் செயல்படுத்த நிதி வழங்கியமைக்காக மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் சந்தித்து நன்றி தெரிவித்தார்கள். உடன் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தரமோகன் ஆகியோர் உள்ளனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (20.3.2025) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத் துறை உயர்மட்டக் குழு உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் ச.தங்கவேலு சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.03.2025) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில் விரிவுபடுத்தப்பட்ட 1,000 ஒருகால பூஜைத் திட்ட திருக்கோயில்களுக்கு அதற்கான ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 10 அர்ச்சகர்களிடம் ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் சி.பழனி, இணை ஆணையர் பொ. ஜெயராமன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.03.2025) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை மூலம் செயல்படுத்தப்படும் ஒருகால பூஜை திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ள 17,000 திருக்கோயில்களுக்கான வைப்பு நிதியினை தலா 2.50 இலட்சம் ரூபாயாக உயர்த்திட 85 கோடி ரூபாய் மற்றும் இத்திட்டத்தை விரிவுப்படுத்தும் வகையில் கூடுதலாக 1,000 திருக்கோயில்களுக்கு ஒருகால பூஜை மேற்கொள்வதற்கு ஏதுவாக ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் தலா 2.50 இலட்சம் ரூபாய் வீதம் மொத்தம் 25 கோடி ரூபாய், என மொத்தம் 110 கோடி ரூபாய்க்கான காசோலையினை தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் வைப்பு நிதியாக முதலீடு செய்யும் விதமாக அதன் தலைமை நிதி அலுவலர் திருமதி பீ. ஜமீலாவிடம் வழங்கினார். இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் சி.பழனி, இணை ஆணையர் பொ. ஜெயராமன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (21.3.2025) முகாம் அலுவலகத்தில், உலகத் தமிழர் பேரமைப்பின் நிறுவனர் பழ. நெடுமாறன் அவர்கள் சந்தித்து, தொகுதி மறுசீரமைப்பு தொடர்பாக ஏழு மாநிலங்களைச் சேர்ந்த கட்சிகளை ஒன்றிணைத்து நாளை கூட்டம் நடத்தவுள்ளதையொட்டியும், இந்திய அளவில் இது போன்ற பிரச்சினைகளில் முதலமைச்சர் அவர்களின் முன்னெடுப்புகளை பாராட்டியும், வாழ்த்துத் தெரிவித்தார். இச்சந்திப்பின் போது, உலகத் தமிழர் பேரமைப்பின் பொதுச் செயலாளர் எம்.ஜி.கே. நிசாமுதீன் மற்றும் நிர்வாகிகள் உடனிருந்தனர்.

வேளாண் நிதிநிலை அறிக்கை:

விவசாயிகள் முதல்வரை மனதாரப் பாராட்டுகிறார்கள்!

பேரவையில் – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பெருமிதம்!

சென்னை, மார்ச் 22 - வேளாண் நிதிநிலை அறிக்கை கண்டு, விவசா யிகள் எல்லாம் முதல்வர் அவர்களை மனதாரப் பாராட்டுகிறார்கள் என்று வேளாண் துறை அமைச்சர் எம். ஆர்.கே.பன்னீர்செல்வம் சட்டப் பேரவையில் பெருமிதத்துடன் குறிப் பிட்டார்.

சட்டப்பேரவையில் அவர் கூறியதாவது:-

எதிர்க்கட்சியினர் எங் களை பாராட்டுவார்கள் என்று நாங்கள் எதிர்ப் பார்க்கவில்லை. விவசாயி கள் பாராட்டுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைய தினம் முத லமைச்சர் அவர்களை பல் வேறு மாவட்டத்தைச் சார்ந்த விவசாயிகள் மன தாரா இப்போதுதான் பாராட்டிவிட்டுச் சென் றார்கள். அதனால் நீங்கள் பாராட்டுவீர்கள் என்று நாங்கள் எதிர்பார்க்க வில்லை.

உங்கள் புதிய idea, புதிய கருத்துக்களைச் சொல்லி, இந்தத் திட்டத்தை கொண்டு வாருங்கள் என்று சொன்னால், அது ஆரோக்கியமாக இருக் கும். அந்தந்தப் பகுதிகளை சார்ந்த விவசாயிகளிடம் நாங்கள் கருத்து கேட் டோம். இந்த budgetஐ பொறுத்தவரை, நாங்கள் இங்கே Officeல் உட்கார்ந்து தயார் செய்யவில்லை. பல மாவட்டங்களுக்கு சென்று, பல விவசாயி களை சந்தித்து அவர்களு டைய கருத்துகளை கேட் டு-அப்போது கருத்துக ளை-நீங்கள் வரவில்லை, உங்களுக்கு கூறவும் தெரி யாது. ஆக தெரிந்தாலும் சொல்லமாட்டீர்கள்.

அந்தந்த மாவட்டங்க ளின் கருத்துகளை உள் வாங்கி, தேவைக்கேற்ப, என்னென்ன தேவைகள் என்பதை அறிந்துதான் இந்த நிதிநிலை அறிக் கையை நாங்கள் தயார் செய்திருக்கிறோம். அதன் அடிப்படையில் மக்கள் வாழ்த்துகிறார்கள். அவர் கள் கூறிய கருத்துகளை, இப்போது திட்டமாக அறிவித்திருக்கின்றீர்கள் என்று முதலமைச்சர் அவர் களை நேரடியாக சந்தித்து இப்போது வாழ்த்து தெரி வித்தார்கள். உறுப்பினர் சோளத்தைப் பற்றி சொல் கிறார்.

இந்த ஆட்சியில் சோளத்தின் உற்பத்தியை அதிகமாக உற்பத்தி செய் வதற்கு, கடந்த ஆண்டு முதல் அதற்கு தீவிரமாக நிதி ஒதுக்கீடு செய்து, அத னுடைய பரப்பளவை உயர்த்தியிருக்கின்றோம். ஆக, இந்த ஆண்டும்கூட, சோளத்திற்கு என்று தனி யாக நீங்கள் நிதிநிலை அறிக்கை படித்துப் பார்த் தால் தெரியும் அதற்கான திட்டங் களை அறிவித்தி ருக்கின்றோம். நன்றாகப் படித்து, நன்றாகச் சொல் லுங்கள். பாராட்டுவதற்கு மனது இல்லையென்றா லும், அதை என்ன செய்ய வேண்டுமென்ற நல்ல கருத்துகளை, ஆரோக்கிய மான கருத்துகளைக் கூறி னால் நாங்கள் ஏற்க தயா ராக இருக்கின்றோம்.

பாதிப்பு என்று கேள்வி பட்டவுடன், அதற்குரிய நஷ்ட ஈட்டையும் வழங் கிய அரசு, நம்முடைய முதல்வர் அரசு என்பதை யும் தெரிவித்துக்கொள் கிறேன்.

ஏ.பி.ஜெயசங்கரன்: Tractor அனைத்து இடத்திலே யும் வேளாண்மை பொறி யியல் துறையின் மூலம் கொடுக்கப்படுகிறது. இப்போது எங்கள் ஊர் பகுதியில் அந்த tractor அனைத்தும் repair ஆகி நிற் கிறது. விவசாயி களுக்கு எந்தப் பலனும் இல்லை. இப்போது தனியாரிடம் சென்று அவர்கள் வாடகை எடுத்து ஓட்டுகிறார்கள்.

அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: அது உங் கள் ஆட்சிக் காலத்தில் வாங்கின tractor ஆக இருக் கும். புதியதாக tractor வாங்கி அது உடனே repair ஆகாது. அது கடந்த உங் கள் ஆட்சி காலத்தில் வாங் கியிருப்பார்கள். அந்த tractorம் machine தானே. அது வாங்கி நாளாகியிருக்கும், repair ஆகியிருக்கும். அது ஒரு குற்றமா? உங்கள் ஊரில் நடந்ததை யெல் லாம், பொத்தாம் பொது வாக சொல்லக்கூடாது.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.